பதற்கு அவர்களே முன் நின்று ஆணை பிறப்பிப்பார்கள் என்று கருதுகின்றேன். ஆகவே அத்தகைய முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுத்து, எங்கள் பகுதியில் மேலும் ஒரு மீன்பிடி துறைமுகத்தை அமைக்க முயல்வாரா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விருந்திற்கு ஏற்பாடு செய்யும்போது நிச்சயமாக வருகிறோம்.

வலம்புரிச் சங்கு.

*4927 திரு. துரை சந்திரசேகரன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் 1987-88, 1988-89, ஆம் ஆண்டுகளில் வலம்புரிச் சங்கு கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், வலம்புரி சங்கு எடுப்பதற்குத் தனியாக ஊக்கத்தொகை வழங்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

9.50 மணி.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடற்கரையில் பல பகுதிகளில் காணப் படும் வலம்புரிச் சங்கினை நவீன முறையில் எடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்குகள் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் இயற்கையாகக் கிடைக்கும் அரிய சங்குகள் ஆகும். இது பருவ சங்கு குளிப்பின்போது சங்குத் தொழிலாளர்களால் கண்டு எடுக்கப்படுவதாகும். எனவே இதில் நவீன முறைகள் எதுவும் மேற்கொள்ள இயலவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு? அது எடுப்பதற்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை எவ்வளவு? அது அதிகரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 2]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவக்களே, வலம்புரிச் சங்கு கண்டு எடுக்கப்படுவதன் மூலமாக சங்குத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை நீங்கலாக அரசுக்கு இதுவரை கிடைத்த நிகர லாபம் ரூ. 20,537.25 காசு ஆகும், அதே நேரத்தில் வலம்புரிச் சங்குகள் கண்டுஎடுத்து வருகிற தொழிலாளர்களுக்கு அரசு ஆணை எண் 817, நாள் 18-7-1984, வனம் மற்றும் மீன் வளத் துறையின் வாயிலாக ஊக்கத் தொகை வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. அதாவது சாதாரணமாக எடுத்து வருகிற சங்குகளின் கொள்முதல் விலையினைப் போல ஆயிரம் மடங்கு தொகை வழங்கப்படவும் அதனுடைய வள்ளத்திற்குச் சன்மானத் தொகை ரூ. 100-ம் மற்றும் உடன் வருகிற சங்கு குளித் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 வீதம் வழங்கவும், மேலும் அந்த வலம்புரிச் சங்கினை விற்பனை செய்து அந்தத் தொகையின் மூலமாக-அதாவது விற்பனை செய்து வருகிற தொகையின் மூன்றில் ஒரு பாகத்தினை, முன்பு வழங்கிய தொகை போக மீதி இருப்பின் அதனை வழங்கவும் வழி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன்: தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்குக்கும், இடம்புரிச் சங்குக்கும் உள்ள வித்தியாசத்தை தலைவர் இந்தச் சபையிலே விளக்குவாரா என்று அறிய விரும்பு கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. அந்தத் துறை அமைச்சருக்கு அது தெரியாதாம், நான் சொல் கிறேன். வலம்புரிச் சங்கு, இடம்புரிச் சங்கு என்றால் இயற்கையாக எல்லாச் சங்குகளிலும் அதனுடைய பின்பகுதி இடப்புறமாக இருக்கும், ஆனால் இந்த வலம்புரிச் சங்குகளுக்கு மாத்திரம் வலப்புறமாக அதனுடைய சுற்றுக்கள் அமைந்து இருக்கும். இதுதான் வலம்புரிச் சங்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த இடம் நம்முடைய திரு. முத்தையன் அவர்களுக்குப் புரியும் என்று நான் எண்ணு கிறேன். எனவே தான் அது இடம்புரி. (சிரிப்பு)

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் அரசாங்கத்திலே எவ்வளவு சங்குகள் எடுக்கப்படுகின்றன. ஆயிரத்திற்கு ஒரு சங்கு வலம் புரிச் சங்காகக் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக எல்லா இடங்களிலும் அது கிடைப்பதில்லை. இராமேஸ்வரம் பகுதியிலே தூத்துக்குடி பகுதியிலே அது கிடைக் கிறது. இப்போதும் கூட மீன் பிடிக்கச் செல்லுகிற மீனவர்கள் சிலர் அதை எடுத்து வருகிறார்கள் என்று தெரிய வருகிறது. கன்னியாகுமரி பகுதியிலே பார்த்தால் வலம்புரிச் சங்குகளை

விற்பனைக்கு விற்கிற நிலை இருக்கிறது. இதனால் கிடைக்க வில்லை என்று சொல்லுகிற நிலையை மாற்றவும், ஆண்டு தோறும் அந்த சங்கு குளிக்கும் தொழில் நடக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கு என்பது எப்போதாவது ஒரு முறைதான் சங்குத் தொழிலாளர்கள் எடுத்து வருகிறார்கள். ஆனால் அறவே கிடைக்கவில்லை என்று நான் கூறவில்லை. அதாவது 1987-88, 1988-89 ஆம் ஆண்டில் வலம்புரிச் சங்கு கண்டுபிடிக்கப்பட்டதா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் எழுப்பிய வினாவிற்குத்தான் இல்லை என்று பதில் அளித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அது தவிர கன்னியாகுமரி, இராமேஸ்வரம் பகுதியில் மட்டும்தான் அது கிடைக்கிறது என்றல்ல. எல்லா பகுதிகளிலும் கிடைக்கின்றன. சங்குத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அந்த தொழிலாளர்கள் அந்தச் சங்கினை எடுத்து வந்து அரசாங்கத்

9-55 மணி.

திற்குக் கொடுக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகின்றது. சங்குத் தொழில் இப்போது தூத்துக்குடி பகுதியில் நடைபெற்று வருகின்றது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கு எடுப்பதன்மூலம் 20,000 ரூபாய்க்கு மேற்பட்டு வருமானம் கிடைத்தது என்று சொன் னார்கள். அந்தச் சங்குகள் எந்தெந்தப் பகுதிகளில் எடுக்கப் பட்ட சங்குகள், அந்தச் சங்குத் தொழில் எந்தெந்தப் பகுதி களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தூத்துக்குடி, இராமநாத புரம், தஞ்சாவூர் போன்ற பகுதிகளிலே அந்தச் சங்கு குளிக் கின்ற தொழில் நடைபெற்று வருகின்றது. அரசிற்குக் கிடைத்த வருமானம் ரூபாய் 20,537.25 காசு. அது அந்தப் பகுதிகளில் கிடைத்த வலம்புரிச் சங்குகளின் மூலமாகத்தான் கிடைத்திருக் கின்றது. தற்சமயம், தூத்துக்குடி, இராமநாதபுரம் பகுதி யிலேதான் அந்தத் தொழில் நடைபெறுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்குகள் அபூர்வமாகத்தான் கிடைக்கக்கூடியன என்று சொல்கிறார்கள். அப்படி அந்த வலம்புரிச் சங்கு கிடைக்

கின்றபோது, அரசிற்குத் தெரிவிக்காமல் அதை எடுத்தவர்கள் கள்ள மார்க்கெட்டிலே தனியாருக்கு இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா, அப்படிப்பட்டவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு வலம்புரிச் சங்கை எடுத்து வருபவர்கள், தனியாக வெளி மார்க்கெட்டிலே விற்கின்றார்கள் என்று ஏதாவது குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1— மேம்பாலம் அமைத்தல்.

வினா எண் 924—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாம்பரம் தொகுதி ஒட்டியம்பாக்கம் கிராமத்திற்கு செல்லும் வழியில் உள்ள ஓடையில் கட்டப்பட்டுள்ள தரைப் பாலம் மழைக் காலங்களில் பயன்படுத்த முடியாததாக உள்ள தால் அங்கு ஒரு மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா

அண்மையில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு இல்லை.

விடை—

2—

வேடசந்தூர்—மார்க்கம்பட்டி நகரப் பேருந்து

வினா எண் 1155—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேடசந்தூர்—மார்க்கம்பட்டி (வழி) புளியமரத்துக் கோட்டை, தேவிநாயக்கன்பட்டி, குரும்பபட்டி, செல்லிவலைசு வழித்தடத்தில் புதியதாக நகரப் பேருந்து விடப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS